

உ சிவமயம்.

தஞ்சாவூர் ஜில்லா பட்டுக்கோட்டை தாலுகா
ஏனாதி கிருமத்தில்
எழுந்தருளியிருக்கும்

# ஸ்ரீ செல்லியம்மன் மீது

பாடிய பாட்டு.

ஷை தாலூகா, சூரப்பள்ளம் கிருமத்திலிருக்கும்
சர்க்கரைப் புலவன் மரபினன்
P. N. வடிவேல் தாஸ் அவர்களால்
இயற்றியதை
பட்டுக்கோட்டை "கமர்ஷியல் பிரஸில்"
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1940. [பைசா 0—0—6.

உ

சிவமயம்.

## வெண்பா

மூலாதாரனே முருகர் சகோதரனே
நாலாகலையளிக்கும் நாதனெனுஞ்சிவனார் சீலாசீ-
இஷ்டமுருகு செல்விமேல் சிந்தெழுத
நஷ்டம்வாரா தன்கிருபை நாடு.

## விருத்தம்.

கல்விமய சோலைசூழ் யேனதிநகர்வளரு
நாரணி கௌரியின்மேல்
நல்லிலக்கணமும் இலக்கியந்தெரியாத
நாவலனுமன்பு கொண்டு
செல்வியம்மாளுன்று சேவை தரிசிக்கவே
சிந்து பாமாலை சூடிச்
சொல்லியே வந்தனை துபதியில் விற்பனைசெய்ய
சோரமில்லா தருள்குவை

## வளையல் சிந்து மெட்டு.

1. தேவிதிருவாய்திரை யேனதிநகர் வாழுஞ் செல்வி
யம்மன்மீது நானுஞ் சிந்து
செப்பிடவே தேனும்—நல்ல
தேன்கமழ் மாகூடல் வளர்சிந்துரத்தான் காப்பே.

2 தீருதவல்வினையைத் தீர்க்கும் செல்விமாரி இந்தச்
ஜெகத்துக்கோர் சிங்காரி—அவள்
திருவடிக்கேபாரி—எனத்
தினந்துதிக்க நலங்கிடைக்குந் திருவுளகெம்பீரி

3. புலவர்புகழ் பூபதியே பிறந்ததெந்தவூரு அடியாள்
போற்றினேனே நிரு—மதைப்
புகன்றிடவே பாரு—அந்தப்
புனல்வளஞ்சூழ் செல்லியம்மன் புகழதனைக்கூறும்

4. தங்கத்தமிழ் நாட்டிலே தஞ்சைஜில்லா மானே
[தாலூகா
பட்டுக்கோட்டை தானே—அங்கு
வசிப்போர் தனத்தோனே—அதில்
வடவீதி எந்தன்வீடு சூரப்பள்ளந் தானே

5. மாதரசேவந்திடுவாய் மாவீரநகர் தாண்டி பாளைய
மென்பகிதுதாண்டி—கொஞ்சங்
கால்நடையைத் தூண்டி—கடந்து
வந்திடுவாய் மாங்குயிலே செம்புறன்
[குளந்தாண்டி

6. செட்புறன் குளத்தைவிட்டுத் திரும்பி முன்னால்
[பாரு-பெண்ணே

ஜெகம்புகழும் ஊரு—அதன்
செழிப்புகளைப்பாரு—அது
சிலமோங்கும் ஆலடிக்குழுளை என்று சொல்வார்
[பேரு

7. சத்திரமுங்கடையுந்தாண்டி தங்கமேநீ வாராய்-
[கொஞ்சுங்
கிளியே ஜோராய்—உன்
சஞ்சலத்தைத் தீருய்—அங்கு
தோன்றுதுபார் கந்தர்வகோட்டை ரோட்ட
[தென்ன சீருய்

8. கண்ணுட்டியே நடந்து கடுகிவாடி சேரகம் பெண்
காரிகை யுன் மோகம்—நான்
கண்டவுடன் யோகம்—நாம்
களை தெளிந்துபோவோமடி நருள் வழிக்
[கொல்லை போவோம்

9. ஆயர்குலந்தனிலுதித்த அன்புமிகுநேசன் அவன்
யாருக்கும் விசுவாசன்—அருளான
நடராஜன்—அவன்
பெண்டீர்பிள்ளை ஆடுமாடுபெருகச்செய்வான்ஈசன்
10. களைதெளிந்து போச்சுதடி கண்மணியே
[வா வா கருணை

காக்ஷிதா மூவா—முதல்வன்
காக்க நீயே வா வா—உனது
கழலடியை நான்பணிந்தேன் கருணைபுரியும் தேவா

11. யேருதி என்பதுவும் இந்நகர்தானே-இங்கு
இருப்போர் தனத்தோனே—இன்னும்
எடுத்துரைப்பேன் நானே—நான்
இன்னுமொன்று கேட்பேன்கோபம்
[வேண்டாமே சீமோனே

12. யேருதிஎன்பதுவும் என்ன—அதன்பொருளும்
[திரு
வாய்மலர்ந்து அருளும்—சுவாமி
எனக்கெதிரே நீரும்—அதை
எடுத்துச்சொன்னால் மனக்கவலை தீருமே கண்
[பாரும்

13. யேருதி என்பதும் எந்நிழையே கேளும்-அது
மதியணிந்தோன்வாழும்—நல்ல
மாபுனல்கள் சூழும்—அந்த
மதியணிந்த ஈசன்வளர் மாளைகளுங்கேளும்

14. அவ்வூர் பஞ்சாயத்தார் ஐய்ந்துபேரு யாரு
யாரவர்கள் தேரு—நன்றாய் [அதில்

அதில் தருமர் பாரு—நல்ல
மாமுகத்து வேலோரும் மனைவியுள்ள வீடு

15. வெங்கடாஜல வேளாளர் முருகைய வேளாளர்
[நன்றாய்ப்
பேசும் செல்ல வேளாளர்—நல்ல
வேலாயுத வேளாளர்—இவர்கள்
நாட்டாண்மைக்காரர்களாய் நாலொருபேர் தோழர்

16. ரோட்டைவிட்டுக் கீழிறங்கி நண்ணியே நீ
[வாடி பொன்னுச்சாமி
ஊர்த்தி வீடுதேடி—பெண்ணே
நடந்துவாடி—அங்கு
அதுகடந்து பாலம்பாரு அம்மன்கோவில் பாரு

17. விக்கிரம ஆண்டுமதி கடகமது சோதி-அடி
விளம்புவனே தேதி—இரு
ஐந்துநாலு தேதி—அதற்கு
ஏற்றபடி காப்புகட்டி யிருப்பதே சம்மதி
18. ஊருக்குத்தென்கிழக்கில் உத்தமியாள் வீடு-
அவள் குடியிருந்தகாடு—நன்றாய்
ஓங்கிகவிபாடு—நல்ல
உருக்கமுள்ள கவியதையுனைக் கொடுத்து
[வாங்கிப்பாடு

### லாவணி மெட்டு.

1. அண்டரெண்டம்ஜொலிக்களங்கள் செல்விமாரிக்கி
ஆடிக்திருவிழாவைப் பாரும் பாரும் (அ)
2. கொண்ட யிருபத்தெட்டுத் தேதியிரவுதனில்
கோரியகாட்டிற்கொண்டே வைத்து வைத்து (அ)
3. புதனும் வியாழனுக்கும் நடக்குந் திருவிழாவைப்
புவியில் எடுத்துரைக்கப்போமோ போமோ (அ)
4. இதம் பெறவே காவடி லெட்சக்கணக்காய் வரும்
இன்னும்உறைக்க நாவால்ஆமோ ஆமோ (அ)
5. நாகிழங்கிள்ளை மைனவாகுடனே மிருதங்கம்
நவிலுந்த திங்கினத்தோம கொண்டே
[கொண்டே (அ)
6. நஞ்சைவளங்கள் சூழுஞ் சூரப்பள்ளத்தில் வாழும்
நாவலன் வடிவேலு கண்டே கண்டே (அ)

### அய்யா பாஞ்சிப்பீர் என்னை என்ற மெட்டு.

#### பல்லவி.

1. சங்கரி எந்தன்மீது தயவில்லையா அம்மா தாயே (த)

#### அநுபல்லவி.

2. சங்கிர்தாம்போஜகாந்தமா மா மநிபம தநிஸநி
மங்களாங்கி மதனரி மனோகரி (சங்)

சரணம்.

3. செங்கஞ்ச மலர்முகவீரி தேவாதி தெய்வசிங்காரி
வந்தாள வா சிங்கமேரி [தயவில்லையா]

4. செல்வியம்மா எனையாளும் திருவருள்
தந்திடநாளும் நல்லிலக்கணமதுசூழ (தயவில்)

5. காவடிகள் கோடிதேரும் கண்காண நின்னருள்
தாரும் வாவடி வேலுக்கருள்தர (தயவில்லையா)

தாசிரந்தார்—என்ற மெட்டு.

பல்லவி.

1. தாய் நீயம்மா தனது புகழ் பரவிவளர்
தண்டுளப மாயவனின் அண்டர்தொழுஞ்
[சோதரி நீ (தாய் நீயம்மா)

மதுடம்.

2. தரணிமீது பிணிவிலக்குஞ் சங்கரி கபாலிநீலி
மங்கிடாமலாதரிக்கும் (தா)

அநுபல்லவி.

3. தாயிருக்கச் சேயழுகஞாயமென்ன செல்வியம்மா
தங்கும் இனபெயர்துலங்கும்
எங்குமுனது புகழ்விளங்கும் (தாய்நீயம்மா)

தொகையறு.

4. தேசாபிமானமுள்ள தாமன் சிறேங்குஞ்ஜுநகர்
வாசன்-அவன்றனக்கு உதவியாக-உன்
அரும்பர தங்கானவே ஆகியவன்

சரணம்.

5. எங்கும் அங்கும் யெங்கும் யேழைக்கிரங்குவாய்
ஞாலத்திலருளுவாய்-ஈ தெடுத்துரைத்து வரும்
எண்டிசைபுகழ் வடிவேல் தொண்டுக்கு ஈடுண்டோ
தககசதா—தத்தித்தா—தல்ாங்கிர்தக
தகவென வருகிற (காய்சீயம்மா)

மூட்டைபோ நில்லு என்ற மெட்டு

பல்லவி.

1. போகாதே நில்லு புகழ்சேரு செல்வியம்மன்
கவிகேட்டுச் செல்லு (போ)

அநுபல்லவி.

2. ஏகாதே ஏகாதே ஏ சபையோர்களே-மோகன்
வடிவேல் பாட்டுப்புத்தகம் வாங்காமல் (போ)

சரணம்.

3. நற்றமிழறிந்தவர்கள் நாடியே பாரும்
நாளுமிம உண்தவிளை யாவுமேதீரும்-கற்றவர்கள்
இதைக்கண்டு கட்டாயம் வாங்கும்-கருணை
பொழிசேர் செல்வியம்மனருளோங்கும் (போ)

முற்றிற்று.